In the Court of the Magalir Neethimandram Fast Track Mahila Court, Thoothukudi

S.C.No.250/2022

Deposition of P.W.5

| | |
|---|---|
| Name | திருமதி.மல்லிகா |
| Father's Name/Husband's Name | திரு. |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Evidence Act Chapter X of 1872 on the 11th day of December 2024.

(1 வது எதிரி ஆஜர் செய்யப்பட்டார்.2 வது எதிரி ஆஜர்.3 வது எதிரி ஆஜர் இல்லை.3 வது எதிரியின் வருகையின்மையை மன்னிக்க பிரிவு 355 பாரதிய குடிமக்கள் பாதுகாப்புச் சட்டம், 2023 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனு அனுமதிக்கப்பட்டது)

**<u>முதல் விசாரணை</u> :**

நான் மருதன்வாழ்வில் குடியிருந்து வருகிறேன்.இறந்த மீனாட்சியை எனக்கு தெரியும். எதிரிகள் மூவரையும் எனக்கு தெரியும்.(1,2 எதிரிகள் ஆஜர்.3 வதுஎதிரி ஆஜர் இல்லை. அவரது வருகையின்மையை மன்னிக்க மனு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனு ஏற்கப்பட்டது.) கடந்த 01.07.2022 ம் தேதி இரவு 8.45 மணியளவில் சாட்சி அழகர்சாமி அவரது வீட்டில் அலறும் சத்தம் கேட்டு நான் அவரது வீட்டிற்கு சென்று பார்த்தேன். நான் அவரது வீட்டிற்கு செல்லும்போது மீனாட்சி மல்லாந்த நிலையில் கிடந்தார். அவரது வாயிலிருந்து ரத்தம் வந்து கொண்டிருந்தது. ஏற்கனவே மீனாட்சிக்கு இருதய அறுவைசிகிச்சை செய்யப்பட்டு வீட்டில் இருந்தபடியால் இயற்கையாக இறந்துவிட்டார் என்று எண்ணினோம். பின்னர் மீனாட்சியின் பிரேதத்தை குளிப்பாட்டினோம்.குளிப்பாட்டும்போது

மீனாட்சியின் பிரேதத்தில் அவர் அணிந்திருந்த செயின் மற்றும் கம்மல்களை காணவில்லை. மேலும் அவரது பிரேதத்தில் கைகளிலும், மூக்கிலும், உதட்டிலும் காயங்கள் காணப்பட்டது. இதனை நாங்கள் சாட்சி அழகர்சாமியிடம் தெரிவித்தோம். சாட்சி அழகர்சாமியின் வீட்டில் பீரோ உடைக்கப்பட்டிருந்தது. அதிலிருந்த நகை மற்றும் பணம் காணவில்லை என்று சாட்சி அழகர்சாமி எங்களிடம் தெரிவித்தார். அதன்பிறகு சாட்சி அழகர்சாமியின் மகன்கள் வந்தபிறகு மறுநாள் சாட்சி அழகர்சாமி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். மீனாட்சியை குளிப்பாட்டும்போது எடுத்து வைத்திருந்த புடவை, உள்பாவாடை, ஜாக்கெட் ஆகியவற்றை 02.07.2022 ம் தேதி நண்பகல் 12 மணியளவில் ஆய்வாளர் என் முன்னிலையிலும் சாட்சி பாப்பா முன்னிலையிலும் அத்தாட்சியில் கைப்பற்றினார். கைப்பற்றப்பட்ட ஆடைகளில் லேசாக ரத்தக்கறை இருந்தது. அத்தாட்சியில் நாங்கள் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். அந்த அத்தாட்சி **அ.சா.ஆ.4**. எங்கள் முன்னிலையில் கைப்பற்றப்பட்ட புடவை இதுதான் அது **சா.பொ.1**. எங்கள் முன்னிலையில் கைப்பற்றப்பட்ட உள்பாவாடை இதுதான் அது **சா.பொ.2**.எங்கள் முன்னிலையில் கைப்பற்றப்பட்ட ஜாக்கெட் இதுதான் அது **சா.பொ.3**. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>1,3 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

எதிரிகளுடன் எனக்கு பழக்கம் கிடையாது. எதிரிகளுடன் நான் பேசமாட்டேன். அழகர்சாமி புகார் கொடுத்த பின்னர் அன்றைய தினம் சுமார் 11 மணிக்குமேல் என்னை போலீசார் விசாரித்தார்கள். அதன்பின்னர் போலீசார் என்னை விசாரிக்கவில்லை. நான் ஊரில் இல்லை. போலீசார் என்னை விசாரித்தபோது மீனாட்சியின் வாயிலும், மூக்கிலும் ரத்தம் வந்த

விவரத்தை சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. மீனாட்சியை நானும், இன்னும் இரண்டுபேரும் குளிப்பாட்டினோம். அந்த நேரத்தில் அழகர்சாமியின் வீட்டில் நிறையபேர் கூடியிருந்தனர். நான் 01.07.2022 ம் தேதி இரவு 8.45 மணிக்கு அழகர்சாமியின் வீட்டிற்கு சென்றேன். அதன்பின்னர் தான் குளிர்சாதனபெட்டி வந்தது. அழகர்சாமியின் வீட்டின் சைடில் மீனாட்சி குளிப்பாட்டும்போது அப்புறப்படுத்திய சேலை, உள்பாவாடை, ஜாக்கெட் ஆகியவற்றை வைத்தோம். மாற்று உடையை சாட்சி பாப்பா கொண்டுவந்தார். மீனாட்சியை குளிப்பாட்டுவதற்கு முன்னர் அவர் அணிந்திருந்த சேலை, உள்பாவாடை, ஜாக்கெட் ஆகியவற்றை எடுத்துவைத்துவிட்டு குளிப்பாட்டினோம். நாங்கள் அவ்வாறு எடுத்து வைத்த ஆடைகளில் ரத்தக்கறை இல்லை என்று சொன்னால் தவறு. அழகர்சாமியின் வீட்டில்வைத்து அத்தாட்சியை எழுதினார்கள். நான் அதனை படித்து பார்க்கவில்லை. போலீசார் அத்தாட்சியை எழுதினார்கள் அந்த போலீஸ்காரர் யார் என்று எனக்கு தெரியாது. எதிரிகள் மீது முன் விரோதத்தின் காரணத்தால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் தவறு.

<u>2 வது எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>

( 1 மற்றும் 3 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணையை 2 வது எதிரி தரப்பில் ஏற்றுக்கொள்வதாக குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டு மேற்படி குறிப்பாணை பதிவு செய்யப்பட்டது)

**<u>மறுவிசாரணை :</u>**இல்லை

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி அளித்த சாட்சியம் அவர் கூறிய அதே வார்த்தைகளால் என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் எதிரிகள் / எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி **கையொப்பம்** செய்துள்ளார்.

MADHAVA RAMANUJAM S

Digitally signed by MADHAVA RAMANUJAM S
Date: 2024.12.11 17:34:38 +0530

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
தூத்துக்குடி.

தட்டச்சு செய்தவர் – சு.கோமதி.